Barne-, ungdoms- og familiedirektoratet

# சிறுவர்நலன் பேணற்சேவை

## பிள்ளையின் சிறந்த நலனிற்காக



## நோர்வேயின் சிறுவர்நலசேவை

வீட்டில் இடர்பாடான நிலைமைகள் ஏற்படும் போது அல்லது வேறு காரணங்களால் பிள்ளைக்கு சிறுவர்நலசேவையின் உதவி தேவைப்படும் பட்சத்தில்( உதாரணமாக நடத்தைப் பிரச்சனைகள், போதைவஸ்து) சிறுவர், பதின்மவயதினர் மற்றும் குடும்பங்களுக்கு சிறுவர்நலசேவை உதவியையும் ஆதரவையும் வழங்கும். பெற்றோர் தமது பிள்ளைக்கான பராமரிப்பை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். ஆனால் பெற்றோர் அதில் சிரமங்களை எதிர்நோக்கும் போது அல்லது கடினமாக இருந்தால் சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கு உரிய தேவையான பராமரிப்பை பெறும் வகையில் சிறுவர்நலசேவை உதவியை வழங்கும்.

ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சிக்குத் சேதம் ஏற்படும் சூழ்நிலையில் வாழும் சிறார் மற்றும் பதின்மவயதினர் உரிய நேரத்தில் உதவியையும் பராமரிப்பையும் பெறுவதை சிறார்நலசேவை உறுதிப்படுத்துவதோடு சிறாரும் பதின்மவயதினரும் பாதுகாப்பாக வளர்வதற்குரிய சூழலை ஏற்படுத்த சிறுவர் நலசேவை பங்களைப்பைச் செய்யும்.

## பிள்ளையின் சிறந்த நலனிற்காக

பிள்ளையின் சிறந்த நலனின் அடிப்படையில் சிறுவர்நலசேவை செயற்பட வேண்டும். இது சில சந்தர்ப்பங்களில் பெற்றோரின் கருத்துடன் முரண்பட்டதாதாகஅமையலாம். பெற்றோரே சிறந்த பராமரிப்பாளர்களாக செயற்படும் வகையில் சிறவர் நல சேவை பெற்றோருக்கு உதவி மற்றும் ஆதரவ்வை முதன் முதலில் வழங்க வேண்டும். இந்த உதவி போதுமானதாக அமையாவிடில் அல்லது பெற்றோரின் பிரச்சனை பாரதூரமானதாக இருப்பின் குறுகிய அல்லது நீண்ட காலத்திற்குப் பிள்ளையை வேறிடத்தில் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம்

## நாம் கஸ்டமுள்ள நிலைமையில் இருக்கிறோம்,சிறுவர்நலசேவை உதவுமா ?


பராமரிப்புத்தேவையை உறுதிப்படுத்துவதற்கு உதவியும் ஆதரவும் தேவைப்படும் இடர்மிக்க நிலைமை எல்லோருக்கும் ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குடும்பத்திற்கு உதவும் பொறுப்பை சிறுவர்நல சேவை கொண்டுள்ளது.

பிள்ளையை தம்மிடமிருந்து எடுத்து விடுவார்களோ எனப் பயப்படுவதால் சிறுவர்நல சேவையுடன் தொடர்பு கொள்வது சிக்கலானது எனப் பலர் கருதுகின்றனர். பிள்ளையின் பராமரிப்பை பொறுப்பேற்பதென்பது பிள்ளை, பெற்றோர் மீது எடுக்கப்படும் ஒரு மிகத் தீவிரமான நடவடிக்கையாகும். ஆதலால் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும்.

சிறுவர்நல சேவையின் உதவி உங்களுக்குத் தேவைப்படும் பட்சத்தில் நீங்கள் வசிக்கும் நகர சபையுடன் தொடர்பு சந்திப்பொன்றை ஒழுங்கு செய்யலாம். உரையாடலுக்காக நீங்கள் சந்திக்கும் போது சிறுவர்நலசேவையுடன் இணைந்து உங்கள் குடும்பத்திற்கு எவ்வகையான உதவி ஆதரவுத் தேவைகளுள்ளன என்பதை ஆராயலாம்.

சிறுவர்நல சேவையிடம் உதவி பெறும் பெரும்பாலானோருக்கு பிள்ளையும் பெற்றோரும் சேர்ந்து வாழக்கூடியவாறு அவர்களது வீட்டிலேயே உதவியைப் பெறுகிறார்கள். இதனை நாம் உதவிஏற்பாடு என அழைப்போம். இதற்கு உதாரணங்களாக இவை அமையலாம்:

- குடும்பத்திற்கு ஆலோசனை வழிகாட்டல்
- பெற்றோர் குழுக்கள்
- உதவு நபர்
- சிறுவர் பராமரிப்புக்கட்டண நிதி உதவி
- பாடசாலை ஓய்வுநேர ஏற்பாட்டு நிதி உதவி (SFO/AKS)



### குடும்பநல அலுவலகங்களிலும் உதவி கோரலாம்.

குடும்பத்தில் நெருக்கடி முரண்பாடு கஸ்டங்கள் ஏற்படும் போதும் நாளாந்த பிரச்சனைகள் பற்றியும் இங்கு குடும்பத்தினர் உரையாடவும் அறிவுரை பெறவும் முடியும்.



2012 ல் சிறுவர்நலசேவையின் உதவி பெற்ற அனைத்து சிறார்களில் 40 வீதம்அறிவுரை, வழிகாட்டலையும் 20வீதம் தங்குதல ஏற்பாட்டையும் 19 வீதம் நிதி உதவி அடங்கிய ஏற்பாட்டையும் பெற்றனர். சிறுவர்நலசேவையின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்டவற்றில் 80% மேலான சிறார்கள் சுயவிருப்பின் பேரில் உதவி பெற்றனர். (தேபுஇ)

## எனக்குத் தெரிந்த பிள்ளையொன்றைப் பற்றி எனக்கு கவலையாகவுள்ளது. சிறுவர்நலசேவையிடம் நான் தொடர்பு கொள்ள வேண்டுமா?

தாய் அல்லது தந்தை என்ற முறையில் சிறுவர்நல சேவையுடன் தொடர்பு கொள்ள உங்களுக்கு சிலவேளை அச்சம் இருக்கலாம். உறவினர், அயலவர், ஆசிரியர் அல்லது இப்படியான தொடர்புள்ளவராக நீங்கள் இருப்பின் இதில் தலையிடுவது பற்றி திடமில்லாமல் இருக்கலாம்.

தொடர்பு கொள்ளாவிடின் அதன் விளைவு சட்டப் பிரகாரம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவியும் ஆதரவும் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் கிட்டாமல் போவதாக அமையும்.

சிறுவர்நலசேவையுடன் தொடர்பு கொள்ள பயப்பிடாதீர்கள். தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரச்சனையை/ கவலையைத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்கு சிறந்த பல அறிவுரைகளையும் யோசனைகளையும் நீங்கள் மேற்கொண்டு செய்ய வேண்டியவை பற்றியும் உங்களுக்கு அல்லது நீங்கள் கவலை கொள்பவருக்கு தாம் எவ்வாறு உதவலாம் என்பதிலும் சிறுவர்நலத்துறை பணியாளர்கள் உதவுவார்கள்.

சிறுவர்நலசேவையுடன் தொடர்பு கொள்வது சங்கடமாக உங்களுக்குத் தோன்றினால் சூழல் மேம்பாட்டாசியர், சுகாதாரதாதி, ஆலோசகர் அல்லது பிற வளர்ந்தோர் இந்த வியடத்தில் உங்களுக்கு உதவலாம்.

## தகவல் வழங்கும்போது நான் என்னை அடையாளம் காட்டமால் இருக்கலாமா ?

- சிறுவர்நலசேவையுடன் தொடர்பு கொள்ளும் போது உங்களை அடையாளம் காட்டுவதா இல்லையா என்பதை நீங்கள் தெரிவு செய்யலாம்.
- தகவலைப் பதிந்தவர் யாரென பெற்றோரோ சிறுவர்நலசேவையோ அறிந்து கொள்ளா வண்ணம் நீங்கள் உங்கள் பெயரைக் குறிப்பிடாமல் விடயத்தை பதியலாம். குடும்பத்தினர் தகவலைப் பார்க்கும் வாய்ப்பை கொண்டுள்ளனர் என்பதை மனதில் கொள்ளவும். உதாரணமாக நீங்கள் பிள்ளையின் மாமி என குறிப்பிட்டிருந்தால் அது உங்களை இலகுவாக இனங்காண உதவும்.

## பிள்ளை அல்லது குடும்பம் பற்றி கவலைதெரிவிப்பு தகவல் சிறுவர் நலசேவையினருக்கு கிடைக்கும் போது என்ன நிகழ்கிறது?

பிள்ளை அல்லது குடும்பமொன்று இடர்பாடுகளைக் கொண்டிருப்பதாக கருதும் சிலர் தொலைபேசி அல்லது கடிதமூலம் சிறுவர்நலசேவைக்குத் தெரிவிப்பது பல சந்தர்ப்பங்களில் நிகழ்வதுண்டு. இதனை நாம் கவலைதெரிவிக்கும் தகவல் என அழைப்போம். விடயத்தை மேலும் ஆராய வேண்டிய அவசியமுண்டா இல்லையா என மதிப்பிடும் கடமையை சிறுவர்நலசேவை கொண்டுள்ளது.

விடயத்தை மேலும் ஆராய்வதற்கான அடிப்படை இருப்பதாக சிறுவர்நலசேவை கருதும் பட்சத்தில் தகவல் எதற்காகப் பதியப்பட்டுள்ளது என்பது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற தகவலைப் பதிவு செய்தவருடனும் தொடர்பு கொள்ள நேரிடலாம்.

சிலவேளைகளில் இவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டிய தேவை சிறுவர்நலசேவைக்கு இருப்பதில்லை. விடயத்தை மேலும் விசாரிக்க பிள்ளையின் பெற்றோருடன் நேரடியாக தொடர்பு கொள்ளும். அப்போது சிறுவர் நலசேவை அலுவலகத்தில் அல்லது வீட்டில் சந்திப்பை நடாத்த பெற்றோர் அழைக்கப்படுவர். சிறுவர்நலசேவை பெற்றோரின் வீட்டுக்கு வருவது பற்றி முன் கூட்டியே கடிதமூலம் தெரியப்படுத்தும்.

பெற்றோர் சிறுவர்நலசேவையை சந்திக்கும் போது கவலைதெரிவிக்கும் தகவலைத் தெரியப்படுத்துவதோடு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெற்றோர் தாமே அதை வாசிக்கலாம். கவலைதெரிவிக்கும் தகவலின் உள்ளடக்கத்தைத் தெரிந்து கொண்ட பின் சிறுவர்நலபணியாளரும் குடும்பமும் அதில் குறிப்பிட்டவை பற்றி உரையாடுவர். பெரும்பாலும் குடும்பத்தையும் பிள்ளையையும் நன்கு தெரிந்த ஏனையோருடனும் சிறுவர்நலசேவை பேச விரும்பும். உதாரணமாக சுகாதாரநிலையம், சிறுவர்பராமரிப்பகம், பாடசாலை, PPT சேவை இவை போன்றவை.

ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் விடயத்தைப் தொடர்ந்து கவனிக்க வேண்டுமா இல்லையா என சிறுவர்நலசேவையினர் கண்டறிவார்கள்.



## பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் உரிமைகள்

பிள்ளையுடன் வசிக்கும் பெற்றாரும் மற்றும் பராமரிப்பு பொறுப்புக்கொண்ட பெற்றார் இருவரும் சிறுவர்நலசேவை விடயத்தில் பங்காளிகள். நீங்கள் விடயத்தில் பங்குதார்ராயின் பின்வரும் உரிமைகளைக் கொண்டுள்ளீர்கள்:

- விடய ஆவணங்களை பார்வையிடல்
- சிறுவர்நல சேவையின் தீர்மானத்தை மேன்முறையீடு செய்தல்
- பிராந்திய குழுகூட்டத்திற்கு சமூகமளித்து உங்கள் கருத்தை தெரிவித்தல்
- பிராந்திய குழு விடயங்கள் மற்றும் வழக்களுக்கு வழக்கறிஞரை இலவசமாகப் பெறல்
- பிராந்திய குழுவின் தீர்மானத்தை முறையிடல் இவற்றை நீதிமன்றங்களில் மேன்முறையிடல்
- பராமரிப்பு பொறுப்பேற்றலை கைவிடும் படி கோரிக்கை முன்வைத்தல்



## ஐ நா சபையின் சிறுவர்கள் உரிமை உடன்படிக்கை

இவ் உடன்படிக்கை 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் எனவும் இவர்கள் அனைவரும் இச் சிறுவர்கள் உரிமை உடன்படிக்கையுள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் எனவும் வலியுறுத்துகிறது.

சிறுவர்களின் உரிமைகள்:

- சிறுவர்கள் அனைவரும் பிறக்கும் போதே சுதந்திரமும் சமபெறுமதியும் கொண்டவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் பெயர் மற்றும் பிரஜாவுரிமை பெறும் உரிமையுடையவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் பாதுகாப்பை பெறும் உரிமையுடையவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் சிறந்த சுகாதாரஉதவி, போதியஉணவு, குடிநீரைப் பெறும் உரிமையுடைவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் தமது கருத்து செவிமடுக்கப்பட்டு கவனத்தில் கொள்ளும் உரிமையுடையவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் பாடசாலை செல்லும் உரிமையுடையவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் விளையாட்டு, ஓய்வு மற்றும் தூக்கத்திற்கான உரிமையுடையவர்கள்.
- சிறுவர்கள் அனைவரும் இவ் உரிமைகள் அனைத்தையும் கொண்டுள்ளனர்.

## சிறுவர்நல சேவையுடன் நான் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம்?

### கடித மூலம் தொடர்பு கொள்ளல்

நீங்கள் கவலைதெரிவிக்கும் தகவலை எழுத்தில் தபாலில் அனுப்பலாம். இதில் உங்களுக்கு உதவி தேவை எனவும் சிறுவர்நலசேவையைச் சந்திக்க ஒரு நேரத்தை ஒதுக்கும்படி கோரலாம். நீங்கள் பிள்ளையொன்றைப் பற்றிக் கவலை கொண்டிருந்தால் அத்தகவலை எழுத்து மூலம் தெரிவிக்கலாம். அதில் பிரச்சனை என்ன என்பது பற்றி சுருக்கமாக குறிப்பிட்டு தகவல் யாரைப் பற்றியது எனவும் சிறுவர்நலசேவை குறிப்பிட்ட நபருடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

### தொலைபேசியில் தொடர்பு கொள்ளல்

பிள்ளை/ பதின்மவயதினர் இருக்கும் நகரசபையிலுள்ள சிறுவர்நலசேவையுடனும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வேளை சிறுவர்நலப்பணியாளர் ஒருவருடன் நீங்கள் கவலைகொள்பவரைப் பற்றி உரையாடலாம். அப்போது மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான அறிவுரை, உதவி யோசனைகளையும் பெறலாம். நீங்கள் உங்களை அடையாளப்படுத்தாமலும் இருக்கலாம்.

### சந்திப்பு

உரையாடலுக்கு நேரம் ஒதுக்க ஏற்பாடு செய்யவும். பல சிறுவர்நலசேவைகள் அறிவுரை – வழிகாட்டல் உரையாடலுக்கென நேரத்தை ஒதுக்கியுள்ளன. உங்களுக்கு இது தேவைப்படின் உங்கள் பகுதி நகரசபையிலுள்ள சிறுவர்நலசேவையுடன் தொடர்பு கொண்டு அவர்களால் நேரம் ஒதுக்க முடியுமா என கேட்கவும். இது போன்ற உரையாடலில் உங்களுக்கு கவலையளிக்கும் விடயம் பற்றி பேசுவதுடன் நீங்கள் மேலும் செய்ய வேண்டியவை பற்றிய அறிவுரையையும் பெறலாம். உங்களுக்கு ஆதரவாக ஒருவரை உடன் அழைத்துச் செல்லலாம்.

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவையெனில் நீங்கள் இதை கோரலாம்

### குடும்ப ஆதரவாளர் சந்திப்பு

சிறுவர்நலவிடயங்களில் என்ன நடக்கப் போவதென்பதை வழமையாக சிறுவர்நலசேவையே தீர்மானிக்கும். இடர்பாடுகளைக் கொண்ட நிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு குடும்ப ஆதரவாளர்கள் சந்தித்து உரையாடும் ஏற்பாடு ஒன்றைச் செய்ய உதவி வழங்கப்படும்.

மற்றும் பிள்ளைக்கு முக்கியமானவர்களும் குடும்பத்துடன் ஒன்று கூடி நடாத்தும் ஒரு சந்திப்பு குடும்ப ஆதரவாளர் சந்திப்பாகும். பிள்ளையினதும் குடும்பத்தினதும் நிலைமையை மேம்படுத்த என்ன செய்ய வேண்டும் என குடும்பத்தினர் தமக்குள் ஒரு இணக்கத்திற்கு வந்த பின் இது பற்றி சிறுவர்நல சேவையுடன் கலந்துரையாடுவர்.

நீங்கள் பீதியடையும் அல்லது விரும்பதகாத செயலுக்குட்பட்டிருந்தால் அல்லது உங்களுக்கு தெரிந்தவர் குடும்பத்தில் கஸ்டத்தை எதிர்நோக்கும் பட்சத்தில் – தயார்நிலை பணியில் இருக்கும் சிறுவர்நலசேவையுடன் அல்லது **எச்சரிக்கை தொலைபேசி 116111** க்கு அழைக்கவும்.

TIBE / ILLUSTRASJONSFOTO: TINE POPPE. LARS PETTER PETTERSEN / tinagent.no

Barne-, ungdoms- og familiedirektoratet

**அஞ்சல்முகவரி**
Postboks 2233
3103 Tønsberg

**வருகைமுகவரி**
Stensberggaten 27
0170 Oslo

**bufdir.no**